மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண் 4 சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 78/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் தீர்மானங்கள்

அ. அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்: ''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 6-அரசினர் தனித் தீர்மானம்'' என்பது ,இனம் 5—அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல்'' என்ற தலைப்பில் நிதி ஒதுக்க சட்டமுன் வடிவின் பின், எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற் றப் பெற்றது.

9. அரசினர் தனித் தீர்மானம்

நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்துதல்) சட்டம்,

(மத்தியச்சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுதல்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—'நீர் தூய்மைக் கெடுதலைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், நீரைப்பராமரிப்பதற்கும், சேமித்துவைப் பதற்கும் அது தொடர்பான அல்லது துணைக் காரியங்கள் எல்லா வற்றிற்கும் இடை நிகழ்வான பிறவற்றிற்கும் இந்தியா முழு வதற்கும் ஒரே சீரான சட்டம் இருப்பது விரும்பத்தக்கது என்று இப்பேரவை கருதியுள்ளதாலும்:

இச் சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையில் பட்டிய II-லுள்ள 17-ஆம் பதிவுடனும் (நீர் அதாவது பட்டியல் 1 லுள்ள 17 ஆம் பதிவின் விதித்துறை களுக்குட்பட்டு, குடிநீர் வழங்கல், பாசனக் கால்வாய்கள், வடி கால். ஏரிகளுக்குக் கரை அமைத்தல், நீரைச் சேமித்து வைத்தல் மின்சக்தி) 6ஆம் பதிவுடனும் (பொதுச்சுகாதாரம்—துப்புரவு) தொடர்புடையதாக இருப்பதாலும்:

நாடாளுமன்றம், சட்டத்தின் மூலம் அஸ்ஸாம், பீகார், குஜராத் அரியானா, இமாசலப் பிரதேசம், ஜம்மு, காஷ்மீர், கருநாடகம், கேரளம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மேற்சொன்னவற்றை முறைப்படுத்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின் கீழ் தீர்மானங்களை நிறைவேற்றியதைத் தொடர்ந்து நாடாளுமன்றம், 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மைகெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டத்தை (மத்தியச் சட்டம் 6/1974) இயற்றியுள்ளதாலும்

மேற்சொன்ன 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றப்படுவது விரும்பத்தக்கது என்று சட்டமன்றப் பேரவைக்குத் தோன்றுவதாலும்:

எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களால் இச் சட்டமன்றப் பேரவை. 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல்-கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றப்பட வேண்டும் என்று இதனால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1981

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"30-6-1981 ஆம் தேதியன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1981 ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1981) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. சு. பாலன்: நான் இத்தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு நிரு செ. அரங்கநாயகம், தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;— '1981-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/1981) ஆய்வுக்கு "எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.'*

பல்கலைக்கழக அதிகாரமன்றங்களின் ஒரே நபர் நீண்டகாலமாகத் தொடர்ந்து உறுப்பினராக இருப்பது அப்பதவியில் அவருக்கு சில தனிப்பற்றுகள் ஏற்படுவதற்கு இடமளிக்கு

---

*1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.